Department of Education Sabaragamuwa Province/ Weekly School Department of Education Sabaragamuwa Province/ Weekly School Department of

# சபரகமுவ மாகாண கல்வித் திணைக்களம்

## வாரப்பாடசாலை

## செயலட்டை - 06

வாரம் - 02

பாடம்:-பொருளியல்

தரம் -12

தயாரிப்பு:- திருமதி .F. றிஸ்லா BA (Hons)
இ/ ஸ்ரீ கிருஷ்ணா மகாவித்தியாலயம்

**தேர்ச்சி 05 :-** பேரினப் பொருளாதாரச் செயற்பாட்டை கவனத்திற் கொண்டு தேசிய கணக்குகளை தயாரிக்கும் ஆயத்தத்தை வெளிக்காட்டுவார்.

**தேர்ச்சி மட்டம் 5.5:-** வருமான வழியில் மொத்த உள்நாட்டு உற்பத்தியை மதிப்பீடு செய்யும் முறையையும் அதனுடன் தொடர்பான எண்ணக்கருக்களையும் விளக்குவார்.

**<u>வருமான அணுகுமுறையிலான தேசிய கணக்கீடு</u>**

குறித்த ஒரு வருட காலப் பகுதியில் பொருட்களையும் சேவைகளையும் உற்பத்தி செய்வதற்கு பங்களிப்புச் செய்த அனைத்து உற்பத்திக் காரணிகளுக்கும் கிடைக்கின்ற காரணி வருமானங்களை அடிப்படையாகக் கொண்டு தேசிய கணக்கீட்டினை மதிப்பீடு செய்தலே வருமான அணுகு முறையிலான தேசிய கணக்கீடு ஆகும்.

வருமான வட்டப் பாய்ச்சலில் வருமானப் பாய்ச்சலை அடிப்படையாகக் கொண்டு தேசிய கணக்கீட்டை மதிப்பீடு செய்யும் முறையாக இம்முறை காணப்படுகின்றது.

காரணி வருமானங்களின் பிரதான வகைகள்,

1. சாதாரண முறைமை
2. புதிய தேசிய கணக்கீட்டு முறைமை (SNA - 2008)

**<u>பின்வரும் எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.</u>**

1. காரணி வருமானங்களின் பிரதான மூலங்கள் எவை?
2. முதன்மை வருமானம் என்பதனால் கருதப்படுவது யாது? விளக்குக.
3. மொத்த தேசிய வருமானத்தில் உள்ளடங்கி வீட்டுத்துறையினரைச் சென்றடையாத கூறுகள் யாவை?

4. மொத்த தேசிய வருமானத்தில் உள்ளடங்காத ஆனால் வீட்டுத் துறையினரைச் சென்றடையக் கூடிய கூறுகள் யாவை?

5. குறித்த ஆண்டுக்கான தேசிய வருமானத் தரவுகள் வருமாறு (மில்லியன் ரூபாய்களில்)

| | |
|---|---|
| உழைப்பு வருமானம் / ஊழிய நட்டஈடு | 3000 |
| தேறிய தொழிற்பாட்டு மிகை | 6000 |
| கலப்பு வருமானம் | 1000 |
| நிலையான மூலதன நுகர்வு | 500 |
| உற்பத்தி மீதான மானியம் கழித்த ஏனைய வரிகள் | 300 |
| பண்டத்தின் மீதான மானியம் கழித்த வரி | 600 |
| வெளிநாட்டிலிருந்தான தேறிய முதன்மை வருமானம் | -1400 |
| வெளிநாட்டிலிருந்தான தேறிய நடைமுறை மாற்றல் | 1700 |

வேண்டடப்படுவது,

1. சந்தையில் விலையிலான மொத்த உள்நாட்டு உற்பத்தி யாது?
2. சந்தை விலையிலான மொத்த தேசிய வருமானம் யாது?
3. சந்தை விலையிலான செலவிடக்கூடிய மொத்த தேசிய வருமானம் யாது?
4. சந்தை விலையிலான தேறிய தேசிய வருமானம் யாது?